// பத்திரிக்கை விளம்பரம்//

தமிழ்நாடு அரசு

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வட்டாட்சியர் அலுவலகம், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.

அறிவிக்கை எண். அ3/1568/2025 நாள்: 09.07.2025

திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு, செங்கம் வட்டத்தில் காலியாக உள்ள 01 (ஒன்று) கிராம உதவியாளர்கள் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | : | 10.07.2025 |
| விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 09.08.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு | : | 08.09.2025 முதல் 14.09.2025 (உத்தேசமாக) |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | : | 15.09.2025 முதல் 23.09.2025 வரை(உத்தேசமாக) |

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் - Level 06 (ரூ.11,100/- - ரூ.35,100/-) |
| வட்டத்தின் பெயர் | செங்கம் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பணிநியமனம் செய்யப்பட உள்ள கிராமங்களின் விவரம் |
| 01 | 01. மஷார் |

2. இனச்சுழற்சி விவரம்

| வ. எண். | இனச் சுழற்சி எண் | வகுப்பு | பொது/ பெண் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | விதவை / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1 | 26 | ஆதிதிராவிடர் (SC) | பெண் | முன்னுரிமையற்றவர் | - |

3. கல்வித் தகுதி

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு (10 ஆம் வகுப்பு) சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு - SSLC (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

4. வயது

| வயது வரம்பு | ST /SC(A)/SC/MBC/DNC/ BC /BC(M) | OC |
|---|---|---|
| அதிகபட்ச வயது | 37 | 32 |
| குறைந்தபட்ச வயது | 21 | 21 |
| வயது குறித்து தகுதி ஏற்படுத்தும் தேதி | 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும். | |
| அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள்: 13.09.2021-ன் படிவயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. | | |
| மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். (Tamil Nadu Government Servants (Conditions of Service) Act - 2016) | | |
| முன்னாள் இராணுவத்தினருக்கு<br>50 வயது - இதர வகுப்பினர்<br>55 வயது - ST /SC(A)/SC/MBC/DNC/ BC /BC(M) | | |

5. இதர தகுதிகள்/ நிபந்தனைகள்-

- விண்ணப்பதாரர்கள் செங்கம் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி-8(1)) துறை, நாள்: 04.06.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி/இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident), நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.

- இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்பட மாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.

- பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- இருதார மனைவி உடையவர்களாக இருக்க கூடாது மற்றும் வேறு கணவர் /மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்க கூடாது.
- தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அழைப்பு கடிதம் (Calling Letter) பெறுவது மட்டுமே பணி நியமனத்திற்கான ஆணை எனக் கருதப்பட மாட்டாது.
- பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்முக தேர்வின் போது சான்றுகள் சரிப்பார்ப்பின் போதும் அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பிக்கும் முறை

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://tiruvannamalai.nic.in/notice_category/recruitment/ என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 09.08.2025-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வட்டாட்சியர்,
செங்கம்.